# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
மார்கழி 9
முஹறம் 23
ஞாயிறு (24-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 59
விலை சதம் 60


## பாராளுமன்றத்தில் எரிமலை குமுறியது!

# ஆயுதப்படைகளின் பயங்கரம்! கூட்டணியினர் ஆக்ரோஷம்!

## அரசாங்க கட்சியினரின் குற்றச்சாட்டை ஆட்சேபித்து சபையிலிருந்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

## அமிர், இராசா, யோகேஸ், சிவா இடிமுழக்கம்!

### ''பயங்கரவாதத்தை முறியடிக்க பயங்கரவாதமே வழி'' —சிறில் மத்தியூ

## ஆயுதப்படைகளின் பயங்கரவாதங்களை தூண்டிவிடுவது நீங்கள்தானு? —சிவா

**தமது இறைமையை சட்டரீதியாக மீட்டுள்ளதுடன்—1977 ஆடிப்பொதுத் தேர்தலில் திட்டவட்டமாகத் தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து தனிநாடாக இயங்கத் தீர்மானித்துவிட்ட தமிழ் ஈழமக்கள் மீது சிங்கள சிறீலங்காவின் ஆயுதப்படைகள் மிலேச்சத்தனமாக கட்டவிழ்த்துவிட்டு வரும் கொள்ளை, தீவைப்பு, தாக்குதல் போன்ற பயங்கரவாதச் செயல்களை மிகக் கடுமையான தொனியில் ஆட்சேபித்து தமிழீழ விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் சிறீலங்காவின் பாராளுமன்றத்தில் ஆக்ரோஷமாக முழங்கியதுடன்; தமிழீழத்தில் இடம்பெற்றுவரும் சில வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் தமிழர் விடுதலைக் கூட்டணியே இருப்பதாகவும், பயங்கரவாத இயக்கத்தின் பாராளுமன்றக் குழுவாகவே கூட்டணி இயங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவரின் மறுப்பையும் ஏற்காமல் திரும்பத்திரும்ப அரசாங்கக்கட்சியினர் கூச்சலும் குழப்பமும் செய்ததையடுத்து; சபையிலிருந்து எதிர்க்கட்சியாகிய கூட்டணி பிரதிநிதிகள் உடனடியாக வெளிநடப்புச் செய்தனர்.**

**ஐக்கிய தேசியக் கட்சி அரசுப் பதவிக்கு வந்தபின் எதிர்க்கட்சியினர் சபையிலிருந்து இவ்வாறு வெளிநடப்பு செய்தது இதுவே முதற்றடவையாகும்.**

*19-12-78* செவ்வாய்இரவு ஏற்கனவே முன்னறிவித்தல் கொடுத்திருந்தபடி ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது வடபகுதியில் இடம் பெற்று வரும், ஆயுதப்படைகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பேசினுர். அவர் பேசும்போது, அரசாங்கத் தரப்பிலிருந்து 'புலிகள்' என்றும், வேறு பல குறுக்கீடுகளும் கூச்சல்களும் இடம் பெற்றன. அதன் மத்தியில் திரு. அமிர்தலிங்கம் பேசியதாவது:-

''நல்லூர் வங்கிக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்ற பின்னர் வடபகுதியில் பொலிசாரினதும், இராணுவத்தினரதும் அட்டூழியங்களும், அராஜகங்களும் அதிகரித்து விட்டன. இதனுல் சாதாரணஅப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர். தெருவால் அவர்கள் அச்சமின்றி நடந்து செல்லவும் முடியவில்லை.

''இம்மாதம் 5ம் திகதி நல்லூர் வங்கிக் கொள்ளை நடைபெற்ற அன்று மாலை யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் பயங்கர அட்டூழியம் நடைபெற்றிருக்கிறது. பொலிசார் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடும் என்று முன் கூட்டியே எதிர்பார்த்து நான். 5-12-78பிற்பகல் 4 மணிக்கே ஜனுதிபதியிடம் தக்க பாதுகாபபு ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டிருந்தேன். அவரும் உயர் அதிகாரியொருவரை அங்கு அனுப்புவதாகக் கூறியிருநதார். ஆனுல் எதுவும் நடைபெறவிலலை. பொலீஸ் மா அதிபர் (அனு செனிவிரத்தினு) யாழ்ப்பாணத்திலிருக்கும் பொழுதே இலக்கமணியாத பொலிசார், யாழ் பேருந்து நிலையத்தில் நின்ற மக்களையும் பெண்டு பிள்ளைகளையும் தாக்கி, கடைகளை உடைத்து, கொள்ளையடித்து வெறியாட்டம் போட்டிருக்கின்றனர். யாழ் அரசாங்க அதிபரின் தலையீட்டினுல் நிலைமை ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது.

### அடுத்தஇதழில்

27.12.78 புதன் இதழில்

வல்வையில் நிகழ்ந்த பயங்கரம் (முழுவிபரம்)

31.12.78 ஞாயிறு இதழில்

தமிழர் பிரச்சினை குறித்து நியூசிலாந்தில் நடைபெறற சர்வதேச கிறிஸ்தவ கவுன்சில் மாநாட்டில் த. வி. கூ. சட்டத்துறை செயலாளர் திரு. எஸ். ஸி. சந்திரகாசன் ஆற்றிய உரை.


இந்த இதழின் உள்ளே


வைகுந்தவாசன் கட்டுரை

### இராணுவ வீரருக்கு எரிகாயம்

''இதையடுத்து எனது தொகுதியிலுள்ள வசாவிளான் என்னுமிடத்தில் கடைக்காரர் ஒருவர் 'கப்பமாக' சிகரெட் கொடுக்க மறுத்ததால், இராணுவத்தினர் கும்பலாக வந்து வசாவிளான் சந்தியிலுள்ள கடைகளில் கொள்ளையடித்து, கொள்ளையடித்த பொருளை ட்ராக்டர் ஒன்றில் ஏற்றிச் சென்றுள்ளதுடன், அங்கு நின்றவர்களை மிலேச்சத்தனமாகத் தாக்கி கடைகளுக்கு பெற்ருேல் ஊற்றித் தீவைத்துள்ளனர். ஏழு கடைகள் எரிந்தன. இச் சம

4-ம் பக்கம் பார்க்க










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




க. ஆறுமுகம்,
வவுனியா.

கே: மாவட்ட மந்திரி பதவியை கூட்டணி ஏற்கப் போவதாக 'இன்டிப்பெண்டன்ற்' தலைப்புச்செய்தி வெளியிட்டுள்ளதே...?

ப: மாவட்டமந்திரிப்பதவியைக் கூட்டணி ஏற்பதாக இருந்தால், ஜனாதிபதியுடன் இரண்டு மூன்று கூட்டணிப் பா. உக்கள் 'குசுகுசு' கூட்டம் நடத்திவிட்டு ஏற்கமுடியாது. கூட்டணியின் 140 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சபை அப்படிமுடிவு செய்தால்மட்டுமே ஏற்க முடியும். கூட்டணிப்பொதுச் சபை கூடவுமில்லை; அப்படியொரு முடிவு எடுக்கவும் இல்லை; அப்படியொரு முடிவை அது எடுக்கப் போவதும் இல்லை! மாவட்ட மந்திரிப்பதவியை ஏற்பதற்கு சென்ற தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணிப் பா. உக்களுக்கு அதிகாரம் வழங்கவுமில்லை.

கே: தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட அனுமதிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறாரே...?

ப: இதன் பொருள்அவர்கள் இப்போது துன்புறுத்தப்படுகிறார்கள் என்பது தானே! வடபகுதியில் பொலிசும் இராணுவமும் தமிழர்களை நாள்தோறும் இம்சைப்படுத்தும்போது— தெருவில் பெண்கள் அச்சமின்றி நடமாட முடியாதிருக்கும்போது-கடைவைத்திருப்பவர்கள் நிம்மதியாக இருந்துவியாபாரம் செய்ய முடியாதபோது— பக்தா இது என்ன பூலோகமா என்று கேட்கிறார் ஜனாதிபதி. தமிழ்மக்கள் துன்புறுத்தப்படக்கூடாதென்பதிலே ஜனாதிபதிக்கு உண்மையான அக்கறையிருந்தால் தமிழ் ஈழத்திலிருந்து ஆயுதப்படைகளை வாபஸ்பெறவேண்டும்!

கே: கூட்டணி பா. உக்கள் மாவட்டமந்திரிபதவியேற்றால்...?

ப: கூட்டணி மாவட்ட மந்திரிகளை பொலிசாரும் இராணுவத்தினரும் தாக்கினார்கள் என்று பத்திரிகைகளில் செய்திவரும்! அடிமைகள் அமைச்சர்களானாலும், அவர்கள் அடிமைகளாகவே நடத்தப்படுவார்கள்!

* * *

செ. மதிவதனன்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒரு விடுதலை இயக்கம் என்கிறீர்கள்; கூட்டணி ஒரு விடுதலைஇயக்கமாக இருந்தால், அது சிங்களஅரசாங்கத்துக்குஆலோசனை கூறும் குழுக்களில் இடம்பெற்றிருப்பது சரியா?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரே சமயத்தில் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை கொண்ட கட்சியாகவும், விடுதலைஇயக்கமாகவும் இரண்டு முனைகளிலும் இயங்குவதே இந்தக் குளறுபடிக்குக் காரணம். என்னைப் பொறுத்தவரை கூட்டணி பா. உக்கள் இத்தகைய ஆலோசனைக்குழுக்களில் இடம்பெறுவதை நானும் விரும்பவில்லை; அரசுடன் ஒரு (CONFRONTATION) நேரடிமோதல்வரும் போது இவற்றிலிருந்து கூட்டணி வெளியேறிவிடும்.

முருகேசு,
யாழ்ப்பாணம்.

கே: அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டே ஜே. ஆர். கூறும் தார்மீகத்துக்கு முரணாக— தமிழ்மக்களை இவ்வளவு தூரம் சிறில்மத்தியூ அவமதிக்கிறாரே— சிறில்மத்தியூவை எதிர்த்துக் குரலெழுப்ப அமைச்சர்கள் தேவநாயகம், தொண்டமான் போன்றோர் ஏன் முன்வரவில்லை? இவர்களுக்கு கொஞ்சமாவது தமிழின உணர்வு கிடையாதா?

ப: சிறில்மத்தியூ எப்படியும் பேசலாம்: அவர் எப்படிப் பேசினாலும் அவர்மீது ஜனாதிபதிநடவடிக்கையெடுக்கமாட்டார். ஆனால் அடிமைஇனத்தைச் சேர்ந்த இவர்கள் தப்பித் தவறி ஏதாவது வாய்திறந்தால், இவர்களது பதவிகள் பறிக்கப்பட்டுவிடுமே!

கே: மட்டக்களப்பில் தம்மைச் சந்தித்த திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் "மேலிடத்து உத்தரவுகளை அமுல்நடத்தும்கடமை தமக்குண்டு என்றும், முழு அதிகாரமும் தம்மிடம் இல்லையென்றும்" மாவட்ட அமைச்சர் கனகரெத்தினம் கூறியதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறியதே— இதிலிருந்து என்ன தெரிகிறது?

ப: மாவட்ட அமைச்சர் பதவியென்பது அதிகாரமற்ற வெறும் 'பொம்மை'ப் பதவியென்பது தெரிகிறது. அரசாங்கத்தின் வெறும் 'றப்பர்ஸ்டாம்ப்' ஆகவே மாவட்ட மந்திரிஇருப்பார். அதுவும் அடிமை நிலையிலிருக்கும் தமிழர் ஒருவர் மாவட்ட மந்திரியானால் கேட்கவா வேண்டும். கனகரத்தினத்தின் குறுகிய கால அனுபவம் இவ்வாறு பேசியிருக்கிறது. இதைத்தான் அவர் "நான் வேளாண்மை வெட்டவந்தவன்— எல்லை பார்க்க வந்தவனல்ல" என்று நாசூக்காக கூறியிருக்கிறார்.

* * *

க. வேலுப்பிள்ளை,
கொழும்பு, 12.

கே: யூனியர் பொன்னம்பலம் என்ன செய்கிறார்?

ப: தமக்கெனத் தனியாட்சிஒன்றை அமைத்துக் கொள்ளவேண்டுமென்பதில் தமிழ்மக்கள் கொண்டுள்ள விடாப்பிடியான உறுதியையும் திடசித்தத்தையும் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அஹிம்சையால் தனிநாடு கிடையாது; ஆயுதப்போருக்கும் நம்மிடம் வலிமை இல்லை; ஆகவே நம்மால் எதுவுமே இயலாது; சிங்களவர்களிலேயே நாம் தங்கியிருக்க வேண்டும் என்ற பழைய பாடத்தை மீண்டும் படிப்பிக்கப்பார்க்கிறார். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்ட ஒற்றையாட்சிச் சிறைக்குள் தமிழ் மக்களை மீண்டும் தள்ளப்பார்க்கிறார். சிறில்மத்தியூவும், ஜே. ஆரும் பின்னாலிருந்து ஆட்டுவிக்கும்போது, அந்தத் தாளத்துக்கு ஏற்றபடி ஆடத்தானே வேண்டும்?

கே: அண்மையில் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டதலைவர் திரு.அமிர்தலிங்கம் எந்த ஒரு நாட்டிலாவது அதிகாரம் பெற்ற தலைவர்களுடனோ எதிர்க்கட்சித்தலைவர்களுடனோ பேச்சுவார்த்தை நடத்தினாரா? அப்படிப் பேசியிருந்தால் யார்யாருடன் பேச்சு நடத்தினர் என்பதைப் பகிரங்கமாகக் கூறட்டும் என்று குமார் பொன்னம்பலம் சவால்விட்டுள்ளாரே?

ப: இப்படிப்பட்ட சவால்கள் மூலம், எதிர்க்கட்சித்தலைவரின் வாயைக் கிண்டி, அவர் வெளிநாட்டில் ஏற்படுத்திக்கொண்டுள்ள தொடர்புகளையும் அங்கு அவர் ஆற்றிய பணிகளையும்அவரைக்கொண்டே கூறவைத்து, அரசாங்கத்துக்கு தகவல் கொடுக்க குமார் பொன்னம்பலம் முயற்சிக்கிறார்— அனுபவமிக்க தலைவர் அமிரா இந்தக் குட்டிச்சாத்தானின் வலையில் விழுவார்?

★ கேள்விகள் அனுப்புவோர் அஞ்லட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம்-

# "அமிர்தலிங்கம் ஏற்படுத்தித் தந்த வசதியை முறியடிக்க இராசதுரை முயற்சி!'

## மட்டுநகர் முதல்வரின் செயலுக்குதமிழிளைஞர்பேரவைகண்டனம்'

யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கிற்கு செல்லும் பொருட்கள் அரசியல் பின்னணியில், சென்ற தேர்தலில் தம்முடன் போட்டியிட்ட இன்னொரு அபேட்சகரின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுவதாகவும், இதனால் ஒரேகட்சி ஆதரவாளர்களிடையே மோதல்கள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் நிவாரணப் பொருட்களை பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை எடுக்கும்படியும் மட்டுநகர் பா. உ. செ. இரா்சதுரை அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிரியர் குறிப்பு;-

இவ்வறிக்கையிற் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கும் குற்றச் சாட்டுக்களுக்கும் தமிழ் இளைஞர் பேரவையினரே பொறுப்பானவர்கள். இவற்றுக்கும்சுதந்திரனுக்கும் சம்பந்தம் கிடையாது. மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரை அவர்கள் இது சம்பந்தமாக மறுப்போ, விளக்கமோ சுதந்திரனுக்கு அனுப்பி வைப்பாராயின், அதுவும் சுதந்திரனில் அப்படியே பிரசுரிக்கப்படும்.

— ஆர்

தமிழர்விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரான இவர், கூட்டணியின் செயலதிபர். அமிர்தலிங்கம் அவர்கள் மிகுந்த பிரயாசையின் பேரில் பொதுஸ்தாபனங்கள் நிவாரணப் பொருட்களை நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகிக்கப் பெற்றுத்தந்துள்ள வசதியை முறியடிக்கும் வகையில் எடுத்துள்ள நடவடிக்கை வேதனைக்கும் கண்டனத்துக்குமுரியதாகும்.

கிழக்கிற்கு முதன்முதலில் சென்ற தொண்டர்கள் தமிழ்இளைஞர் பேரவையை சேர்ந்தவர்களே. இவர்கள் தம்முடன் கொண்டுசென்ற இரண்டு வள்ளங்கள் நிரம்பிய உணவுப்பொருட்களை மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரையிடம் வழங்கியதுடன் அவரது ஒத்துழைப்புடன் நிவாரண வேலைகளில் ஈடுபட அனுமதிகோரினர். தமிழ் இளைஞர் பேரவை தொண்டர்களுக்கு செயலளவிலான ஒத்துழைப்பு ஒருபோதும் திரு. இராசதுரையிடமிருந்து கிடைக்கவில்லை.

இவர்கள் கொண்டு சென்ற உணவுப்பொருட்களை திரு. இராசதுரையிடம் கொடுத்தபின் மட்டுநகருக்கு அரசால் அனுப்பப்பட்ட மாமூடைகளை லொறிகளில் இருந்து இறக்கிக் கொடுத்து, அதற்காக அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட 5மூடை மாவிலேயே எமது இரண்டாவது பகுதி உணவுப்பொருட்கள் சென்றடையும்வரை தமது உணவுக்காக பயன்படுத்தியுள்ளார்கள்.

தமிழ் இளைஞர் பேரவை தேர்தலை மையமாகக் கொண்டதோர் அமைப்பல்ல, தேவையையே நோக்கமாகக் கொண்டு கிழக்குக்கு வந்த எமக்கு அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் அரசியல் அதிகாரிகள், அரசியல் வாதிகள், பொது ஸ்தாபனங்கள், பொது மக்களது ஆதரவு கிடைத்துள்ளது. அழிவின் விளிம்பிற்கே சென்றுள்ள கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கையை பணயம் வைத்து அரசியல் நடத்தவிரும்புகின்றசெயல், திரு. இராசதுரையின் கையாலாகாத்தனத்தையே காட்டுகிறது.

கடந்த சில காலங்களாக வடக்கு, கிழக்கு என்ற பிரதேசங்களை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேட முனைந்துள்ள ஆளும் கட்சியின் கிழக்கிலங்கைப் பிரமுகர்கள் சிலரும், திரு. இராசதுரையும், இன்று வடக்கு, கிழக்கு என்ற பேதங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுகின்ற மக்களுக்கு முகம் கொடுக்க தயங்குகின்றனர். இந் நிலையை நீடிக்கவிட்டால் தங்கள் அரசியல் வாழ்க்கை அழிந்து விடும் என்பதை உணர்ந்துள்ள இவர்கள் வடக்கு— கிழக்கு தொடர்பை அறுத்து விடுவதற்காக அரசின் உதவியை நாடியுள்ளனர்.

கிழக்கிலங்கை மக்களுக்கு இன்று தேவையானது சேவையே. சேவை செய்ய முனைகின்றவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதன் மூலம் ஒருபோதும் மக்கள் ஆதரவைப் பெற முடியாது. ஆகவே எமக்கு முட்டுக்கட்டை போடுவதை விடுத்து எம்மிலும் மேலான சேவையை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் இளைஞர் பேரவை இராசதுரை அவர்களை வினயமாக வேண்டுகிறது.

—இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் அதன் நிர்வாகச் செயலாளர் திரு. யோகநாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடாகிக்கிடந்த மலையகத்தை வெட்டித் திருத்தி பொன் கொழிக்கும் பூமியாக்கிய தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களின் மீது துவேஷம் கொண்டு—நன்றி கொன்று—அந்த மக்களின் குடியுரிமை, வாக்குரிமை மற்றும் சகல உரிமைகளையும் பிடுங்கி, அவர்களை நாடற்றவர்களாக்கி, அவர்களை நாடு கடத்தவும் இந்தியாவுடன் உடன்படிக்கைசெய்தன சிங்கள அரசுகள். போதாக்குறைக்கு 1977 ஆவணிக்கலவரத்தின்போது அந்த மக்களை இங்கிருந்து விரட்டுவதற்காக அவர்களது 'லயன்கள்' கொழுத்தப்பட்டு—கொள்ளையடிக்கப்பட்டு, மலையகத் தமிழ் மாதர்கள் மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்டு—வெறியாட்டம் நிகழ்த்தினர் சிங்கள இனவெறியர். நன்றிகொன்ற இந்த நாட்டிலிருப்பதே பாவம் என்று மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாக இங்கிருந்து வெளியேறி இந்தியாவுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள்—உழைக்கும் வர்க்கம் இனவெறிகாரணமாக விரட்டப்பட்டதால்—மலையகத்தில் தேயிலைத்தோட்டங்களில் உற்பத்தி பெருமளவுவீழ்ச்சியடைந்தது. சென்ற ஆண்டில் மட்டும் சிங்கள அரசுக்கு இதனால் 53 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இப்போது மீண்டும் இந்தியாவிலிருந்து தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களை இங்கு இறக்குமதி செய்வதற்காக இந்தியாவுடன் இலங்கை அரசு பேரம்பேசுகிறதாம்.

இதுபற்றி பின்வருமாறு எழுதுகிறது தமிழக வார ஏடான 'காண்டீபம்', முன்னாள் பா.உ. திரு எஸ். எஸ். மாரிசாமியே இதன் ஆசிரியராவார்.

# மலைநாட்டுத் தமிழர்களை நாடுகடத்தியதால்

# ஓராண்டில் அரசுக்கு நட்டம் 53 கோடி ரூபா!

## இதனால் கப்பலேற்றியவர்களை திருப்பி அழைக்க முயற்சி!

## தமிழக சஞ்சிகை 'காண்டீபம்' எச்சரிக்கை

இலங்கையில் உள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் எல்லாம் அகதிகளாக விரட்டப்பட்டார்கள் அல்லவா? அதையொட்டி இலங்கையில் பயங்கரமான நிலைமை உருவாகியிருக்கிறது. முன்பு இந்தத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை விரட்டிய பிறகு இலங்கையில் உள்ள தோட்டங்களைப் பராமரிக்க சரியான ஆட்கள் இல்லை. தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் காட்டிய திறமையை சிங்கள தோட்டத் தொழிலாளர்களால் காட்ட முடியவில்லை. எனவே உற்பத்தி குறைந்திருக்கிறது. இலங்கை அரசு இந்த நிலையை சமாளிக்க முடியாமல் திணகிறது.

சென்ற ஆண்டில் மட்டும் தோட்டப் பொருள்களின் ஏற்றுமதி வியாபாரத்தில் இலங்கைக்கு 53 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இலங்கை அரசு இந்திய அரசோடு இப்போது பேரம்பேச ஆரம்பித்திருக்கிறார்கள். எப்படி பேரம் என்பதைத்தான் நாம் இப்போது பார்க்க வேண்டும். அதாவது 'காண்டிராக்ட்' முறையில் தமிழ்த் தொழிலாளர்களை திரும்ப இலங்கை அரசு வேலைக்கு எடுத்துக் கொள்ளுமாம். சமீப காலம் வரை அகதிகளாக நடத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட தொழிலாளர்களை இலங்கை அரசு திரும்ப ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒப்பந்த முறையில் வேலைக்கு எடுத்துக் கொள்ளுமாம். அவர்கள் சிறிது காலம் அங்கிருந்து விட்டு திரும்பவும் இந்தியாவுக்கு அகதிகளாக அனுப்பப் படுவார்கள் என்பதைக் கூறத் தேவையில்லை!

இந்த உண்மையை எடுத்துக் காட்டி தமிழ் நாட்டு எம். பி. யான திரு. கே. டி. கோசல்ராம மொரார்ஜி தேசாய்க்கு கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில் ''தமிழ்த் தொழிலாளர்களைப் பற்றி நீங்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கென்யா, உகாண்டா, டான்ஜானியா மற்றும் இதர ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள இந்தியர்கள் துன்பப்படும் போது எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறீர்களோ அந்த அளவுக்கு இந்தத் தமிழ்த் தொழிலாளர்கள் விஷயத்திலும் கவனம் செலுத்த வேண்டுமென்று திரு. கோசல்ராம் தம் கடிதத்தில் குறிப்டுபிகிறார்.

மேலும் இலங்கை அரசுக்கு நமது ஊர் தோட்டத் தொழிலாளர்கள் சேவை மிகமிகத் தேவையாக இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு நாம் அங்குள்ள நமது மக்களையும் பிரஜா உரிமை இல்லாமல் அகதிகளாக நடத்தப்படும் இதர இந்தியர்களையும் பழைய முறையில் அதாவது நல்ல முறையில் அவர்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கி நடத்த வேண்டுமென்று இந்திய சர்க்கார் வற்புறுத்த வேண்டுமென்றும் திரு. கோசல்ராம் சொல்கிறார். அவர் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. இந்திய சர்க்கார் இதைப் பயன்படுத்தி நடந்தால் மிகச் சிறப்பாக இருக்கும்;

திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராக இருக்கும் போது அவருக்கும் திருமதி பண்டாரநாயகாவுக்கும் இலங்கை இந்தியர்களைப்பற்றி ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டில் மிகவும் பாதிக்கப் பட்டவர்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் தான் அதிலும் குறிப்பாக ஏழை மக்களாகிய தோட்டத் தொழிலாளர்கள் தான். அவர்கள் எல்லாம் இன்று அகதிகளாகத் திரும்புகிறார்கள். அல்லது கேட்பாரின்றி மிக மோசமான நிலையிலே இலங்கைச் சிற்றூர்களிலே வாழ்க்கையை நடத்துகிறார்கள். நேற்று வரை தோட்டத் தொழிளாளி என்று இருந்தவன், இன்று பிச்சை எடுக்கிற காட்சியை கண்டி போன்ற பகுதிகளில் நாம் காணலாம்.

திரு. சாஸ்த்திரி தாராள மனது வைத்துப் பண்ணின இந்த உடன்பாடு தமிழர்களைப் பொறுத்த வரை அவர்கள் தலையில் விழுந்த இடியாக வந்தது.

இப்போது ஏற்றுமதி வர்த்தகம் குறைந்து தோட்டங்கள் தரிசு நிலங்களாகக் கிடக்கிற காட்சியைப் பார்த்த பிறகு இலங்கை அரசுக்கு தமிழ்த்தொழிலாளர்களின் அருமை தெரிகிறது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொண்டு அங்கு கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் இந்தியர்களுக்கு நல்வாழ்வு தரும்படி திரு. கோசல்ராம் கேட்டுக் கொள்கிறார். அவர் கோரிக்கை நியாயமானது. இன்றுள்ள ஜனதா அரசு இதை மனதிற் கொண்டு நல்லதொரு முறையில் ஏற்பாடு செய்யும் என்று நம்புகிறோம்.

''காண்டிராக்ற்'' முறை என்பது ஒன்றும் புதிது அல்ல. அது பழங்காலத்தில் இருந்து வந்த ''தலைகாணி'' முறைதான்;

தலைகாணி முறையில் சென்றவர்கள் தான் இன்று கண்ணீரும் கம்பலையுமாக வருகிறார்கள். திரும்பவும் அதே நிலைமைக்கு நாம் போகக் கூடாது. டில்லி என்ன செய்யப் போகிறது என்று பார்ப்போம்!

## இரவில் உதித்த சூரியன்

யேசு எனும் இளம் பரிதி
எழுந்து வரும் இரவில்
வீசுமதன் ஒளி கண்டு
விரைந் தோடும் இருளே!
மாசுமறு அற்ற தொரு
மங்கா வொளி விளக்கு
தூசு மிகு பூமியினைத்
துடைத் தழகு செய்யும்!

* *

தூய மனத் தாமரைகள்
தோழன் இவன் கண்டு
வாயிதழ்கள் திறந்தபடி
வரவேற்று மகிழும்!
ஆயன் இவன் தானென்று
ஆடு, மாடெல்லாம்
நேய முகம் காட்டி மிக
நெருங்கி உறவாடும்!

* *

அன்னியரின் ஆட்சியிலே
அடிமைகளாய் இருந்த
தன்னினமாம் யூதர்களைத்
தற்காத்து நிற்க
அண்ணலவன் தேவ மகன்
அவதாரம் செய்தான்
நண்ணியவன் பாத மலர்
நாம் போற்றி நிற்போம்!

* *

பெருமை மிகு மன்னர் குலப்
பிள்ளையவன் ஏனும்
வறுமையிலே உருளுமொரு
வர்க்கத்தின் தலைவன்
உரிமை யென்க் கொண்டாட
ஒருயிரும் இல்லா
சிறுமை யவன் பிறப்பு இதைச்
சிந்தை தனிற் கொள்வீர்!

—வாகரை வாணன்

## "அன்பு வழியில் சாதியை ஒழித்திட அயராது பாடுபட்ட உத்தமா!"

### அமரர் ஆ.ம.செல்லத்துரைக்கு கூட்டணி தலைவர் அஞ்சலி

தலைசிறந்த காந்தீயவாதியும் சிறந்த சிவபக்தரும் சாதி, தீண்டாமை மற்றும் சமூதாய சீர்கேட்டைக் களைந்திட அன்பு வழியிற் கிளர்ச்சி செய்துவந்தவருமாகிய ஆசிரியர் வதிரி திரு. ஆ. ம. செல்லத்துரை அவர்களின் பிரிவு தமிழ்ஈழத்திற்கு ஏற்பட்டுள்ள ஓர் பேரிழப்பாகும் என்று த. வி. கூ. தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் விடுத்துள்ள ஓர் அஞ்சலிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

அண்ணல் காந்தி வகுத்த வழிநின்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து கல்வித் துறையில் அருந்தொண்டாற்றிய அறிஞர் அமரர் ஆ. ம. செல்வத்துரையின் மறைவினால் தமிழ்ஈழம் தனது தவப்புதல்வர் ஒருவரை இழந்துவிட்டது.

நெற்றி விளங்கு வெண்ணீறு பொட்டு, ஏறுமூக்கின் கண்ணாடி இராசநடை வெள்ளைத்தூய கதர் இவை ஆசிரியரின் தனி முத்திரைகள்.

அமரர் கவிஞர் செல்லையாவின் முதல் மாணவரும் சமூக சமயத்துறைகளில் அவருடன் இணைபிரியாது தொண்டாற்றியவருமாகிய அமரர் ஆசிரியர் செல்லத்துரை கவிஞர் மறைந்த பொழுது அவரின் இடத்தை நிரப்புவதற்கு எம்மிடம் எவரும் இல்லை என்று வருந்தினார். ஆனால் ஆசிரியர் அவர்களே கவிஞரின் சமூகப்பணியை காந்தீய வழியில் சிறப்பாக தொடர்ந்து ஆற்றி பல வெற்றிகளையும் கண்டார்.

சமூகம் அநியாயமாக ஆசிரியரை ஒதுக்கியது; ஆனால் தனது கல்வித்திறத்தினாலும் ஒழுக்கத்தினாலும் ஆசாரத்தினாலும் பண்பாலும் இலட்சியப்பற்றாலும் இனஉணர்வாலும் எல்லோருடைய நன்மதிப்பை பெற்றிருந்தார். ''ஒழுக்கமே உயர்குலம்'' என்பதைவாழ்ந்து காட்டினார்.

ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் மதமாற்றம் சமத்துவத்தையும் உயர்வையும் சுபீட்சத்தையும் தரும் என்று எண்ணியகாலம் [illegible] கவிஞர் ஆசிரியர் போன்றோர் தம் மதம் தம்[illegible] தாம் மறவோம் என்று வாழ்ந்தார்கள். அதேநேரத்தில் சைவ சமயத்துக்குள் புகுந்த சாதி என்ற சாபக்கேட்டை எதிர்த்து அன்பு வழியில் நின்று மகத்தான ஓர் 'போராட்டத்தை' நடத்தினார்கள். பலவெற்றிகளையும் கண்டார்கள் ஆனால் முழுவெற்றி இன்னும் கிட்டவில்லை ஆசிரியரின் ஆத்மா சாந்தியடைய அந்தப் பணியை வெற்றி பெறச் செய்வது எமது கடன்.

காந்தீய பொருளாதாரமே கிராம மக்களுக்குச் சிறந்ததுஎன்பதை நடைமுறையில் காட்டுவதற்கு காந்தியசேவா சங்கத்தின் முழுநேர ஊழியராக இறுதி நாட்களில் உழைத்தார். பல இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடச்செய்து பசிப்பிணியை போக்குவதற்கு உழைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுவில் சேர அழைத்தோம். ஆக்கவேலையை விட்டு வர விரும்பவில்லை.

வாழ்க ஆசிரியரின் நாமம்

அவர் பணி தொடரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதப்படைகளின் பயங்கரவாதம்!

**ஊ**ருக்குத்தான் உபதேசம்— உனக்கல்லடி என்று தன் பெண்டாட்டிக்குக் கூறிய மதபோதகரைப் பற்றி குட்டிக் கதையொன்று கூறப்படுவதுண்டு.

அந்த மதபோதகரின் நிலையும், வாய் ஓயாமல் தார்மீகப் போதனை செய்யும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் தலைவர் அதி உத்தமர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கதையும் ஒன்றுதானா என்ற கேள்வி தமிழ் மக்களின் உள்ளங்களிலே இன்று ஏற்பட்டிருக்கிறது.

அவர் ஒரு புறம் தமிழ் மக்களுக்கு தாம் நேசக்கரம் நீட்டுவதாகக் கூறி வருகிறார்; மறு புறம் அவரது விசுவாசத்துக்கும் அன்புக்குமுரியவரான கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில் மத்தியூவோ— தமிழ் சமுதாயத்தையே அவமானப்படுத்துகிறார்; இழிவு படுத்துகிறார்!

தமிழ் மக்களை எவரும் துன்புறுத்த அனுமதிக்க மாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் ஜனாதிபதி முழக்கமிடுகிறார்; அவர் அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போதே, அவரது அதிகாரத்துக்கும், கட்டுப்பாட்டுக்குமுட்பட்ட ஆயுதப்படைகள் நிராயுதபாணிகளான தமிழ்மக்கள்மீதுபிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை நடத்தியுள்ளன; நடத்தி வருகின்றன.

'போர் என்றால் போர்' என்று தமிழ் மக்களின் தலைவர்களைப் பார்த்து 1977ல் யுத்தப் பிரகடனம் செய்தார் பிரதமராக அன்றுஇருந்தஜனாதிபதி; அதையேவேதவாக்காகக் கொண்டு நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீது அவரது ஆயுதப்படைகள் 'போர்' நடத்த முற்பட்டு விட்டன என்றே எண்ணத் தோன்றுகிறது—

**நிரபராதிகளான அப்பாவித் தமிழர்கள் மீது தாக்குதல்—**

**தமிழர் கடைகளைக் கொள்ளையிடுதல்—**

**கொள்ளையிட்ட பின் அக்கடைகளுக்குத் தீயிடுதல்—**

**தெருவால் செல்லும் பெண்களின் சேலைகளை உரிந்து அவர்களை மானபங்கப்படுத்தல்— அவர்களது தலைமயிரைப் பிடித்து இழுத்துத் தாக்குதல்!**

இன்னோரன்ன பயங்கரக் கொடுமைகள் டிசெம்பர் 5ம் நாளிலிருந்து வடபகுதியில் பல இடங்களிலும் பொலிசாராலும், இராணுவத்தினராலும் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றன. சென்ற வாரம் வசாவிளான் சந்தியிலும், வல்வெட்டித்துறைச் சந்தியிலும் இராணுவ வெறியர்கள் நடத்தி முடித்த அராஜகக் கொடுமைகள் சொல்லில் அடங்கா!

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கென அனுப்பப்பட்ட ஆயுதப்படைகளே, சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி வடக்கில் அராஜகத்திலும்,— பயங்கர வாதத்திலும்— இறங்கியுள்ளன. வன்முறையை அடக்குவதற்கு என்ற போர்வையின் கீழ் வடக்கிலே குவிக்கப்பட்டுள்ள பொலிசும், ஆயுதப்படைகளுமே அப்பாவி மக்கள் மீது— சட்டத்துக்கு அமைந்து நடக்கும் மக்கள் மீது— வன்முறையையும், பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்றன.

ஆயுதப்படைகளும் பொலிசாரும் தமிழ் ஈழத்திலே மேற்கொண்டு வரும் இவ்வாறான பயங்கரவாத நடவடிக்கைகளால்— தமிழ் ஈழத்திலே எந்தப் பயங்கர வாதத்தை முறியடிக்கலாம் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்களோ— அந்தப் பயங்கரவாதம் அவர்களின் எதிர்பார்ப்புக்கு முரணாக மென்மேலும் வளர்வதுடன், ஆயுதப்படைகளால் காரணமின்றி இன்று துன்புறுத்தப்படும் அப்பாவி இளைஞர்கள் கூட, பழிக்குப் பழி என்ற உணர்வுடன் காலப் போக்கில் வேறு வழியின்றிப் பயங்கர வாதத்தை நோக்கி மேன்மேலும் தள்ளப்படக்கூடிய ஆபத்தே ஏற்படக்கூடும் என்று நாம்அஞ்சுகிறோம்.

வன்முறையாளர்களைத் தேடுகிறோம் என்கிற சாட்டில்—தங்கள் மறுக்கொணா உரிமையான சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து — தமிழ் ஈழத்தின் அரசுரிமையை மீளப்பெற்று சுதந்திரமாக வாழத் தீர்மானித்து விட்ட தமிழ் ஈழமக்களை, உருட்டி மிரட்டி, தமிழர் கடைகளைக் கொள்ளையடித்து, அவர்களது வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீவைத்து—பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் சட்டவிரோதமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் அடக்கியாளவே சிங்கள சிறீலங்காவின் ஆயுதப்படைகள் அத்துமீறி தமிழ் ஈழ எல்லைக்குள் நுழைந்து துன்புறுத்தல் நடவடிக்கையிலீடுபட்டிருக்கின்றன என்கிற அடிப்படை உண்மையை ஐ. நா. சபையினதும், ஏனைய சர்வதேச மன்றங்களினதும் கவனத்துக்கு லண்டனிலும் ஏனைய வெளி நாடுகளிலுமுள்ள தமிழீழ விடுதலை அணிகள் உடனடியாகக் கொண்டு வரவேண்டும்!

குற்றவாளிகளிடமே நீதியைக்கோருவது போல— எதுவித காரணமுமின்றி தமிழ் ஈழப்பிரதேசங்களில் முப்படைகளையும் குவித்துவைத்து — தமிழ் மக்களைத் துன்புறுத்துவதற்கு காரணமாக இருந்துவரும் சிறீலங்கா அரசிடம் இந்த அநீதிகள் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதாலும், அவர்கள் விசாரணையென்று கூறிக்கண் துடைப்பு காட்டுவதாலும் எதுவித பயனையும் தமிழ் மக்கள் இதுவரை கண்டதில்லை!

## எண்ணம்

1977 இனக்கலவரத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தையே கைநீட்டி அடித்த சாதாரண பொலீஸ்காரன் சம்பந்தப்பட்ட விசாரணைக்கு இதுவரை என்ன நடந்தது? யாருக்கும் தெரியாது, அடித்த பொலீஸ்காரன் நிம்மதியாக வேலைபார்க்கிறான்!

மாங்குளம் ரயில் துப்பாக்கிச்சூடு ஒரு 'கொலை' என்று நீதவான் தீர்ப்பளித்தும் — சம்பந்தப்பட்ட கொலைச்சந்தேக நபரான இராணுவ அதிகாரிக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக இல்லை.

5-12-78ல் யாழ் நகரில் இடம்பெற்ற பொலீஸ் காட்டுமிராண்டித்தனம் குறித்து யாழ் கச்சேரியில் நடைபெற்ற விசாரணையின் பெறுபேறு என்ன? யாருக்கும் தெரியாது! அதேபோல வசாவிளான் சம்பவத்துக்கும் விசாரணை நடைபெறுகிறதென்று கூறப்பட்டதே தவிர—அதன் பின் என்ன நடைபெறுகிறது என்பது கிணற்றுக்குள் போட்ட கல்தான்!

பிரச்சினைகளின் சூட்டை உடனடியாகத் தணிப்பதற்கும், அதைக் காலகெதியில் ஐஸ்பெட்டிக்குள் போடுவதற்குமே இந்த 'விசாரணை' என்ற வார்த்தை பயன்பட்டுவருகிறது. மற்றும்படி இவற்றால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை நீதி நிலைநாட்டப் பட்டதாக வரலாறே இல்லை!

இந்நாட்டில் ஒவ்வொரு தமிழனும் விரும்பியோ, விரும்பாமலோ தற்பாதுகாப்புக்காக கட்டாய துப்பாக்கிப் பயிற்சி பெற்றுக்கொள்வதுடன், துப்பாக்கியும் கையுமாகவே வாழ வேண்டிய ஒரு நிர்ப்பந்தநிலை முப்படைகளின் பயங்கரவாதத்தின் விளைவாக எதிர்காலத்தில் தோற்றுவிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை!

ஜனாதிபதி அவர்களுக்கு தாம் போதிக்கும் தார்மீக தர்மத்தில் அற்ப சொற்பமாவது நம்பிக்கையிருக்குமானால்—தமது கட்டுப்பாட்டிலிருக்கும் ஆயுதப்படைகள் தமிழ் பிரதேசத்தில் மேற்கொண்டிருக்கும் சட்ட விரோதச் செயல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பதுடன், மக்கள் அச்சமின்றி நடமாடவும் தொழில் செய்யவும் வாழவும் அவர்களுக்கிருக்கும் மனித உரிமையை நிலைநாட்டுவாராக!

ஆயுதப்படைகளின் அக்கிரமங்கள் நிறுத்தப்படாவிடின்— ஒரு உக்கிரமான — பலம் வாய்ந்த தொடர்ச்சியான மக்கள் போராட்டமொன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டமிட்டு ஆரம்பிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறோம்.

1-ம் பக்கத் தொடர்

பவத்தை யடுத்து இராணுவ வீரர் ஒருவர் யாழ் மருத்துவமனையில் எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரிடம் விசாரணை நடத்தினால் பல உண்மைகளை வரவழைக்க முடியும். இத் தாக்குதலின் போது காயமடைந்த மூன்று முஸ்லிம் தையற் கடைக்காரர்களும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இதனால் ஒரு இலட்சத்துக்குமதிகமான சேதம் ஏற்பட்டுள்ளது.

## வல்வையில்

''வல்வெட்டித்துறையில் 14-12-78 இரவிலிருந்தே இராணுவத்தினரின் சட்ட விரோதச் செயல்களால் பதட்ட நிலைமை தோன்றி வளர்ந்து வந்தது. குட்டிமணி என்பவரைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு, அவரது சகோதரராகிய யோகராசா என்பவரை அடித்து உதைத்துத் துன்புறுத்தியதுடன் ஒரு மின்சாரக்கம்பத்தில் சாத்தி வைத்துச் சுடவும் முயன்றுள்ளனர். தெருவில் போவோர் வருவோரைத் தாக்கினர். இந்த நிலைமை 18ம் திகதி இரவு மோசமடைந்தது. இராணுவத்தினர் கைது செய்த யாரோ இருவர் தப்பியோடியதாக சொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பாவிப் பொது மக்கள் மீது இராணுவத்தினர் மிலேச்சத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். மூன்று மணி நேரம் அங்கு பயங்கரம் நிலவியது. 11 கடைகள் இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டபின் அவற்றுக்குத் தீயிடப்பட்டன. இதில் ஒரு அப்பாவிக் கைம்பெண்ணின் வீடும் தீக்கிரையானது.

குற்றவாளிகளைத் தேடுகிறோம் என்ற சாட்டில் அப்பாவிகள் இப்படியான தகக்குதலுக்குப் பலியாக்கப்படுவதும், கடைகள் கொள்ளையடிக்கப்படுவதும் ஒருகொந்தளிப்பான நிலையை தோற்றுவித்துள்ளது. ஆயுதப்படைகளின் சட்ட விரோதமான செயல்கள் சம்பந்தமாக முழுவிசாரணை நடைபெறுவதுடன் இம்மாதிரியான அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்'' என்றார் அமிர்தலிங்கம்.

அடுத்துப் பேசிய உடுப்பிட்டித் தொகுதி பா. உ. திரு. இராசலிங்கம், வல்வெட்டித்துறையில் நிகழ்ந்த ஆயுதப்படைகளின் கொடுமையை விபரித்தார்.

இவரையடுத்துப் பேசிய அரசாங்கக் கட்சியைச்சேர்ந்த மாவத்தகம பா. உ., ''யாழ்ப்பாணத்தில் வங்கிக் கொள்ளை நடைபெறுகிறது; பொலிசார் கொலை செய்யப்படுகிறார்கள்; அதை கூட்டணியினர் கண்டிக்காமல் குற்றவாளிகளைத் தேட முயற்சிக்கும் ஆயுதப்படைகளையே கண்டிப்பது ஏன்?'' என்று கேட்டார்.

இதற்கு யாழ். பா. உ. திரு. யோகேஸ்வரன் ஆக்ரோஷமாகப்பதிலளித்தார்-

''வங்கிக் கொள்ளைகள் வடக்கில் மட்டும் நடைபெறவில்லை — தெற்கிலும் ஏராளமான வங்கிகள் கொள்ளை யடிக்கப்பட்டிருக்கின்றன; அங்கெல்லாம் ஆயுதப்படைகள் இவ்வாறாக

—5-ம் பக்கம் பார்க்க

## பாராட்டு விழா

மூளாயைச் சேர்ந்தவரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் இளம் தொண்டருமாகிய திரு. இ. த. விக்னராசா இலங்கை உயர்நீதி மன்றச் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளதைப் பாராட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மண்டபத்தில் 24-12-78 ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 30 மணிக்கு வட்டுக்கோட்டைப் பா. உ. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் ஓர் விழா நடைபெறுகிறது. விழாவில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ., யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன், கலாநிதி ஹூதர் ஜெயசிங்கம் வ. பொன்னம்பலம், திருமதி அமிர்தலிங்கம் உட்பட கூட்டணி பா. உக்கள் பிரமுகர்கள் உரையாற்றுவார்கள். பாராட்டுமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

## சுதந்திரன் சந்தா

வருட சந்தா ரூபா 50-00
ஆறு மாத சந்தா ரூபா 25-00

## தார்மீகக் குஞ்சுகளின் பண்பாடு!

தமிழர் விடுதலைக்கூட்டணிப் பா. உக்கள் பாராளுமன்றச் சபையை விட்டு வெளியேறும்போது, அரசாங்கக்கட்சியினர் ''புலிகள் போகின்றன-வடைகள் போகின்றன-'' என்று கூச்சல் எழுப்பினர்.

—வீரகேசரி (21-12-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு திமோரும் - தமிழீழமும்

## அரசியல் மடல்

அன்பு நண்பா,

1977 ஆடிப் பொதுத்தேர்தலில் தமிழ் ஈழ மக்கள் தங்கள் மறுக்கொணுப் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து தமது நாடாகிய தமிழ் ஈழ்த்தைத் தாமே ஆள்வது என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தீர்மானித்து விட்ட பின்னரும் —1619ம் ஆண்டு போர்த்துக்கீயரிடம் யுத்த முனையில் பறிகொடுத்த தமிழ் ஈழத்தின் இறைமை 1972 மே 22ல் பிரிட்டிஷ் மகாராணியுடனிருந்து வந்த தொடர்பு முற்ருக அறுபட்டதைத் தொடர்ந்து சட்டரீதியாகத் தமிழ் ஈழ மக்களிடமே மீளவும் வந்துவிட்ட பின்னரும் — சிங்கள சிறீலங்கா அரசாங்கம் இதை அங்கீகரிக்க மறுத்து சட்ட விரோதமாகத் தனது ஆயுதப்படைகளை தமிழ் ஈழத்தில் குவித்து — தமிழ் மக்களை பலாத்காரமாக அடக்கியாண்டு வருகிறது.

''சிறீலங்கா ஒரே நாடு; வடக்கு கிழக்கு மாகாணங்கள் (அதாவது தமிழ் ஈழம்) சிறீலங்காவிலிருந்து பிரிக்க முடியாத பகுதிகள்; சிறீலங்காவின் ஒரு பகுதி மக்களே வடக்கு கிழக்கு மாகாண மக்கள்; சிறீலங்கா குடியரசின் பிரிக்க முடியாத ஒரு பகுதியே வடக்கு கிழக்கு மாகாணங்கள்; ஐக்கிய இலங்கையை பிளக்க விடமாட்டோம்'' என்றெல்லாம் சிறீலங்கா அரசும் தமிழ் ஈழப்பிரிவினையை எதிர்ப்போரும் மார்தட்டி வருவதனை நாம் அறிவோம்!

நண்பா, சிறீலங்காவைப்போலவேதான், தெற்காசியாவிலுள்ள மற்ருேர் நாடும், இப்படித்தான், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்துபோகத் தீர்மானித்து அதற்காகப் போராடிய ஒரு பிரிவு மக்களை— அப்படிப் பிரிந்து செல்லவிடாது, அவர்களது சுதந்திரப் போராட்டத்தை நேற்றுவரை நசுக்கி வந்தது; இன்று அந்த நாடு ஐ. நா. சபையின், குற்றக் கூண்டில்நிறுத்தப்பட்டிருப்பதுடன் அந்நாட்டிடமிருந்து விடுதலை கோரிய மக்களுக்கு ஆதரவாக ஐ. நா. பொதுச் சபை தீர்மானமும் நிறைவேற்றியுள்ளதென்கின்ற செய்தி நமக்குப் புதிய நம்பிக்கையையும் தெம்பையும் ஊட்டுவதாயமைந்துள்ளது.

ஆம் நண்பா, 1948ம் ஆண்டு வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் இந்தத் தீவைவிட்டு வெளியேறிய சமயத்தில் தமிழ்ஈழ நாட்டையும் எப்படிச் சிங்கள சிறீலங்காவின் ஒரு பகுதியாக பலவந்தமாக பிணைத்துவிட்டு, அதிகாரத்தைச் சிங்களவர்களிடம் கொடுத்து விட்டுச் சென்றதோ — அதே போலத்தான் போர்த்துக்கீயரும் கிழக்கு திமோரை (East Timor) இந்தோனேசியாவின் ஒரு பகுதியாக— இந்தோனேசியாவின் ஒரு மாகாணமாக— இந்தோனிசியாவிடம் ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டனர்!

கிழக்குத் திமோர் மக்கள் போர்த்துக்கீயன் போட்ட இந்தச்செயற்கைப் பிணைப்பை அறுத்தெறிந்து — தமது நாட்டின் சுதந்திரத்தை மீட்க—தமது சுயநிர்ணயத்தை நிலைநாட்ட—தம்மைத்தாமே ஆண்டிட எழுச்சியுடன் போராடி வந்திருக்கின்றனர்; இன்றும் போராடி வருகின்றனர்.

கிழக்குத்திமோர் மக்களின் விடுதலைப் போராட்டம் உலகின் கவனத்தை பெருமளவு ஈர்த்தது: உலக நாடுகளின் கரிசனையை ஈர்த்தது; இறுதியில் ஐ. நா. பொதுச்சபைக்கும் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது.

ஐ. நா சபையில் 'கிழக்குத் திமோர்' பிரச்சினை விவாதிக்கப்பட்டபோது — 1976 யூலைத் திங்களில் கிழக்குத் திமோர் இந்தோனேசியாவின் ஒரு பிரிக்க முடியாத மாகாணமாக இருந்ததென்றும், அது முன்பு போர்த்துக்கீயராட்சிக்குட்பட்டிருந்தது பற்றி விவாதிப்பதற்கு ஐ. நா. சபைக்கு உரிமையில்லையென்றும், இந்தோனேசியப் பிரதிநிதி வாதித்திருக்கிருர். அதுமட்டுமன்றி, 'பிரிட்டிலியன்' (Fretilian) என்று அழைக்கப்படும் அரசியல் இயக்கமேகிழக்குத் திமோரில் இந்தோனேசிய ஆட்சிக்கு எதிராகப் போராடிவந்ததென்றும் அந்த இயக்கம் இப்போது இயங்குவதில்லையென்றும் கூறியிருக்கிருர்.

கிழக்குத் திமோரின் மக்கள் இந்தோனேசிய மக்களிலிருந்து பிரிக்க முடியாத ஓர் அங்கம் என்றும்—இறைமையும் சுதந்திரமுமுள்ள இந்தோனேசியக் குடியரசின் பிரிக்க முடியாத பகுதியே கிழக்குத்திமோர் என்றும் ஐ. நா. சபையில் அடித்துப் பேசியிருக்கிருர்!

ஆதிக்கபுரியினர் — நவீன ஏகாதிபத்தியவாதிகள் — இப்படித்தானே பேசுவார்கள்? இது எதிர்பார்க்கப்படவேண்டியது தானே!

இந்தோனேசியப் பிரதிநிதி என்னதான் பேசியபொழுதிலும்— எப்படி வாதிட்டபோதிலும்—விடுதலை கோரும் திமோர் மக்களின் பக்கமே ஐ. நா. பொதுச்சபை வாக்களித்திருக்கிறது; இந்தோனேசியாவின் எதிர்ப்புக்களையெல்லாம் முறியடித்து, கிழக்கு திமோர் மக்களின் சுயநிர்ணய உரிமையும் சுதந்திரமும் அவர்களிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமைகள் என்றும், இந்த உரிமைகளை மீட்டுக்கொள்வதற்காக போராடுவதற்கு அவர்களுக்கு சட்டரீதியாக உரிமையுண்டென்றும் ஐ. நா. பொதுச்சபை மீண்டும் உறுதிசெய்து தீர்மானித்திருக்கிறது.

ஐ. நா. பொதுச்சபையின் குடியேற்ற மீள்வு (Decolonisation) குழுவில் இதுசம்பந்தமாக வாக்கெடுக்கப்பட்டபோது— கிழக்கு திமோர் சுதந்திரத்துக்கு ஆதரவாக 59 நாடுகளும் எதிராக 31 நாடுகளும் வாக்களித்திருக்கின்றன. பொதுக்குழுவில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போதும் திமோருக்கு சார்பாக 55பேரும், எதிராக 29 பேரும் வாக்களித்திருக்கின்றனர்.

சோவியத் யூனியனும் அதனுடைய கம்யூனிஸ்ட் அணியைச்சேர்ந்த நாடுகளும், கம்யூனிஸ்ட் சீனுவும் திமோர் சுதந்திரத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருப்பதும்—அமெரிக்கா அதற்கு எதிராக வாக்களித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதும் நம் சிந்தனைக்குரியதுமாகும்!

24 உறுப்புநாடுகளைக் கொண்ட ஐ. நா. சபையின் குடியேற்ற மீள்வுக்குழு(டீகொலனைசேசன் கமிட்டி) திமோர்நாட்டு நிலைமையை தீவிரமாகக் கண்காணிக்கவேண்டுமென்றும், மிகவிரைவில் கிழக்குத் திமோருக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைக்கவேண்டுமென்றும் பொதுச்சபைத் தீர்மானம் கேட்டுள்ளது.

கிழக்குத் திமோரில் தோன்றியுள்ள பயங்கரமான நிலையை உணர்ந்து ஐ. நா. பாதுகாப்புச்சபை, அந்த மக்களுக்கு சுயநிர்ணய உரிமையும், சுதந்திரமும் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டுமென்றும் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

நண்பா, இப்போது கிழக்குத் திமோர் நிலைமையும்—தமிழ்ஈழத்தின் நிலைமையும்—ஒரே தன்மையுடையதாயிருப்பது உனக்குப் புரிந்திருக்கும்; ஆனல் ஒரு வித்தியாசம்—கிழக்கு திமோர் பிரச்சினை ஐ. நா. சபையின் கவனத்துக்கு எடுக்கப்பட்டுவிட்டது; தமிழ் ஈழப்பிரச்சினை இன்னும் எடுபடவில்லை!

தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துப் பிரிந்து வாழத் தீர்மானித்துவிட்ட தமிழ் மக்கள் மீது—1977ம் ஆண்டு ஆவணி மாதம் இனவெறிச் சிங்களவர்களும் அவர்களது ஆயுதப்படையினரும் மிலேச்சத்தனமான வன்முறையைப் பிரயோகித்து தமிழ் மக்களை வெட்டியும் கொன்றும் இம்சைப்படுத்தியும், தமிழ் மகளிரைக் கற்பழித்தும், தமிழர் சொத்துக்களைக் கொள்ளையடித்தும் வெறியாட்டம் நிகழ்த்தினர்!

இன்று—1978ம் ஆண்டு, தமிழ் ஈழத்தில்; சட்டவிரோதமாக நிலைகொண்டுள்ள சிறீலங்கா அரசின் முப்படைகளும் கைப்பற்றப்பட்ட நாட்டில் நடந்துகொள்வதைப்போன்று— கொள்ளைகளைத் தடுக்கிறேம்—குற்றவாளிகளைத் தேடுகிறேம் என்ற போர்வையுடன்—தமிழ்மக்கள் மீது மிலேச்சத்தனமாக நாள்தோறும் வேட்டைநடத்துகின்றன; தமிழர் கடைகள் ஆயுதப்படையினரால் கொள்ளையிடப்பட்டுத் தீயிடப்படுகின்றன; தெருவழியே தமிழ்ப் பெண்கள் அச்சமின்றி நடமாடமுடியவில்லை; எங்கும் பயங்கரம், எங்கும் அச்சம் குடிகொண்டுள்ளது. சிறீலங்காப்படைகளின் வேட்டைக் காடாக தமிழ்ஈழம் கண்ணீர்வடிக்கிறது!

வடிக்கட்டும்—கண்ணீரிலிருந்து மலர்வதே சுதந்திரம்— இரத்தத்திலிருந்து வெடித்தெழுவதே விடுதலை! தந்தை செல்வா அடிக்கடி கூறுவதுபோல—மாப்புளிப்பது அப்பத்துக்கு நல்லது என்ற உணர்வுடன் நீதியின்மீது—நியாயத்தின்மீது—இறைவனின் மீது நம்பிக்கைவைத்து உறுதியுடன் செயற்படுவோம்!

தமிழ் ஈழத்தில் நடைபெறும் சிங்கள சிறீலங்காவின் இச்சட்டவிரோதக் கொடுங்கோன்மையை ஐ. நா. வுக்கும் உலக அரங்குக்கும் கொண்டுவர லண்டனிலும் ஏனைய வெளிநாடுகளிலும் செயற்படும் தமிழர் அணிகள் உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளட்டும்!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

—4-ம் பக்கத் தொடர்

அராஜகம் நடத்த அனுப்பப்படவில்லை; வங்கிக் கொள்ளைகளுக்காக வங்கிகள் மூடப்படவும் இல்லை— யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் அப்பாவி மக்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றன—தமிழர்கடைகளை இராணுவத்தினர் கொள்ளையடிக்கின்றனர், தமிழ் ஈழத்தில் உங்களால் ஆட்சிநடத்த முடியவில்லையென்ருல் அதை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறுங்கள்'' என்ருர் யோகேஸ்வரன்.

இதையடுத்து கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பேசினுர். அவர்பேசுகையில்—

''நீங்கள் எம்மீது என்னதான் பழிசுமத்தியபோதும் நாம் எமது இலட்சியத்திலிருந்து விலகிவிடப்போவதில்லை; நீங்கள் ஒரு தார்மிகமுள்ள அரசாக இருந்தால், [illegible] தாக்கப்பட [illegible] வழக்கையெடுங்கள்'' என்ருர்.

இதையடுத்துப் பேசிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில்மத்தியூ, பயங்கரவாதிகளின்பாராளுமன்ற இயக்கமாகவே தமிழர் விடுதலைக்கூட்டணி விளங்கிவருகிறதென்றும், வடக்கில் நடைபெறும் புலிகளின் பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தாலேயே முறியடிக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட திரு. சிவசிதம்பரம்—அப்படியானுல் ஆயுதப்படைகளின் பயங்கரவாத நடவடிக்கையை அரசாங்கம் ஆதரிக்கிறதா? அரசுதான் அதை பின்னின்று தூண்டிவிடுகிறதா என்று கேட்டார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியை பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புபடுத்தும் அமைச்சரின் ஆதாரமற்ற கூற்றை வாபஸ்பெறவேண்டுமென்று எதிர்க்கட்சித்தலைவர் கோரியபோதும், மீண்டும் மீண்டும் சிறில்மத்தியூவும் ஏனைய அரசாங்க உறுப்பினர்களும் கூட்டணியை பயங்கரவாத இயக்கத்துடன் சம்பந்தப்படுத்தியதால், அதை ஆட்சேபிக்கும் முறையில், எமது ஆட்சேபம் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் இச்சபையில் எமக்கு வேலையில்லையென்று கூறிவிட்டு எதிர்க்கட்சித்தலைவரும் ஏனைய கூட்டணிப் பா. உக்களும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன்பின்னர் பிரதமர் பிரேமதாசா பதிலளித்துப் பேசுகையில், பயங்கரவாதத்தை அரசு சகிக்காதென்றும், தனிநாடமைக்க தாம் அனுமதிக்கப்போவதில்லையென்றும், தமிழர் விடுதலைக்கூட்டணி அமைக்கப்பட்டபின்னர் வடக்கில் பயங்கரவாதம் அதிகரித்துவிட்டதென்றும், பயங்கரவாதத்தை முறியடிக்க ஆயுதப்படைகள் வன்முறையை உபயோகிக்க நேரிடுமென்றும், எனினும் சட்டவிரோதச் சம்பவங்களையிட்டு அரசு விசாரணை நடத்துமென்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பொருளாதாரக் கொள்கையால் நாட்டில் புரட்சி வெடிக்கும்!



**முதலாளித்துவத்துக்கு முட்டுக்கொடுக்கிறீர்கள்! சோசலிசத்துக்கு குழிதோண்டுகிறீர்கள்**

**ஆட்சியாளருக்கு அமிர்தலிங்கம் எச்சரிக்கை!**

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்திற் பேசிய போது அந்த நிதி நிலை அறிக்கையில் திசைமாற்றம் காணப்படுவதாகக் கூறியிருந்தேன். இன்று அந்தத் திசை மாற்றம் முழுமையடைந்து கடந்த சில தசாப்தங்களாக 1965இல் அமைத்த ஐ. தே. க. இன் தேசிய அரசாங்கம் உட்பட அரசுகள் சென்ற திசைக்கு எதிர்த் திசையிற் செல்வதாக அமைந்து விட்டதைக் காண்கிறோம்.

ஐ. தே. க. தனது தேர்தல் அறிக்கையில் சனநாயக சோசலிச சமூக அமைப்புப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. 1978 செப்ரெம்பரில் பிரகடனப்படுத்தப்பட்ட புதிய அரசியல் யாப்பு இலங்கைக்கு ‘இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என்று பெயர் சூட்டியுள்ளது. இந்த அடிப்படையிலேயே நிதிநிலை அறிக்கை பொருளாதாரக் கொள்கையில் எதிர்நிலை மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

கல்வி அறிவும் தெளிவும் மிக்க நிதி அமைச்சருக்கு சோசலிசம் பற்றி நான் அதிகம் விளக்க வேண்டியதில்லை என எண்ணுகிறேன். சோசலிசம் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும் சில அடிப்படைத் தத்துவங்களை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகத் தாம் செல்வதை உணர்ந்த நிதி அமைச்சர் சோசலிசத்துக்குத் தமது சொந்த விளக்கத்தை அளிக்க முற்பட்டுள்ளார்.

‘‘சோசலிச சார்புள்ளவர்கள் அரசுடைமையான பொருளாதார அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிலர் கருதுவது தவறான கோட்பாடாகும். சந்தைப்படுத்தும் சக்திகளை ஊக்கப்படுத்துவதும் முதலாளித்துவத்தை ஆதரிப்பதாகும் என்ற கருத்தும் முற்றும் பிழையானதாகும்’’ என நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கை உரையிற் குறிப்பிட்டார்.

ஆனால் அவர் மிகச் சாதுரியமாகத்தாம் முதலாளித்துவத்தையா அல்லது சோசலிசத்தையா ஆதரிக்கிறார் என்பதைக் குறிப்பிடாமல் நழுவுகிறார். சந்தைப்படுத்தும் சக்திகளை ஆதரிப்பதால் மட்டும் இது முதலாளித்துவ திட்டம் என நாம் கூறவில்லை இச்சபை முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் திட்டம் முழுவதும் முதலாளித்துவ அடிப்படையில் அமைந்துள்ளதாலேயே நாம் அவ்வாறு குறிப்பிடுகிறோம். இதனை எவரும் மறுக்க முடியாது.

மார்க்சும் எங்கெல்சும் 19 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் உலகுக்கு வழங்கிய விஞ்ஞான சோசலிசத் திட்டத்தில் சோசலிசத்தின் அடிப்படைகள் முன்வைக்கப்பட்டன. இது ஏற்கப்பட்டுள்ளது, ஒருவர் மார்க்சிஸ்ற் கொள்கைகளை ஏற்கலாம் அல்லது விடலாம். நாம் விஞ்ஞான சோசலிச

**பொருளாதாரத் திட்டத்தை ஏற்கிறோம். ஆனால் மார்க்சிய தத்துவத்தை ஏற்கவில்லை அது**

பொருள் முதல்வாத மெய்யியலாக உள்ளது. அது எமது கொள்கைகளுக்கு அந்நியமானது.

சமய விழுமியங்களையும் கடவுளையும் ஆன்மீகத்தையும் ஏற்றுக்கொள்ளும் நாம் பொருள் முதல்வாத அடிப்படையிலான மார்க்சியத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனினும் அவர்களது பொருளாதாரத் திட்டம் உலகின் அரைப்பங்குக்கு மேற்பட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிரதமரும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரும் சோசலிச நாடுகளில் ஏற்படும் பல்வேறு மாற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

சீனாவிலும், உருசியாவிலும், போலந்திலும் யூகோஸ்லேவியாவிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. ஒவ்வொரு நாடும் சோசலிசத்தை நிறைவேற்றத் தமக்குரிய தனித்துவமான நடைமுறைகளைக் கையாள்கின்றன. ஆனாலும் உற்பத்தி, விநியோகம். பரிமாற்றம் ஆகியவை மக்களின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும் என்ற கொள்கை அனைவருக்கும் பொதுவானதே. இதனையே ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பிரகடனப்படுத்தியிருந்தது.

உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம் மக்களின் பொறுப்பில் இருக்கவேண்டுமென்று கூறிவிட்டு அது சில முதலாளிகளிடம் அல்லது முதலாளிகளின் குழுக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் எனவாதிட முடியாது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் நேர்மையாகத் தம்மை சனநாயக் சோசலிசக் கட்சி என்று அழைத்துக்கொண்டு ஐ. தே. க., நிதிநிலை அறிக்கையில் அத்திசையிலிருந்து முதலாளித்துவ திசைக்கு மாற வேண்டி ஏற்பட்டது துர்திஷ்டமானது. யாருடைய நிர்ப்பந்தம் இதற்குக் காரணம் என்பது விளங்கவில்லை.

முன்பு தேசிய மயமாக்கப்பட்ட துறைகளைப் பொறுத்த வரையில் அரசு எதிர்த்திசையில் செல்ல முற்பட்டிருப்பது ஆபத்தானதாகும் அண்மையில் மத்திய போக்குவரத்துச்சபை தலைவர் சில பாதைகளில் தனியார் பஸ், வான் சேவைகளை நடத்த வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியிருப்பதாகப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியாகியிருந்தது. இது ஓர் ஆபத்தான போக்காகும். நீங்களே செய்தவற்றை நீங்களே அழிக்க முனைகிறீர்கள்.

1958, சனவரியில் பேருந்து சேவை தேசிய மயமாக்கப்பட்டதாகக்கருதுகிறேன் 1965இல் பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசு — தேசிய அரசு—முந்திய அரசு செய்த எதனையும் மாற்றி அமைக்க மாட்டாது என உறுதி கூறியது. நாமும் அந்தஅரசியலில் அங்கம் வகித்தோம். ஆறுகள் எதிர்த்திசையில் ஓடுவதில்லை என்று அரசு திட்டவட்டமாகஅறிவித்தது. இம்முயற்சி அனைத்தையும் குழப்புவதாகவே முடியும். அரசு தனது பொருளாதாரக் கொள்கைகளில் பின் திரும்பிச் செல்கிறது என்பதைக் காட்டவே இதனை நான் குறிப்பிட்டேன்.

சபாநாயகர் அவர்களே, இந்த வேளையில் அரசு மக்கள் முன் கூறிய சோசலிச பொருளாதாரத் திட்டத்திலிருந்து விலகிச் செல்கிறது என்றகுற்றச்சாட்டை இங்கு கூற விரும்புகிறேன்.

நிதி அமைச்சர் பேசும் போது நாம் சுதந்திரமான, ஆனால் சோசலிச அடிப்படையிலான பொருளாதாரத் திட்டத்தை ஏற்றுள்ளோம் என்று கூறினார். முதலாளித்துவத்துக்குத் தடையற்ற பாதையை அமைத்துக்கொடுப்பது சோசலிச பொருளாதாரத் திட்டம் ஆக முடியாது.

உலகிலுள்ள சோசலிச அல்லது கொம்யூனிச நாடுகளில் மாற்றம் ஏற்படுவது பற்றிப் பிரதமர் கூறினார். முதலாளித்துவ நாடுகளிலும் இது போன்ற மாற்றம் ஏற்பட்டு வருகிறது. உலக நாடுகளின் பொருளாதார அமைப்பில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே முதலாளித்துவ நாடுகளில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதென்பதை நிதி அமைச்சர் ஏற்றுக் கொள்வார் என நம்புகிறேன். அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தேய்வும் சிக்கலும் முதலாளித்துவ உலகில் பொருளாதாரத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நிதி அமைச்சரே ஒப்புக் கொண்டார்.

இல்லாதோருக்கு உதவுவதே சோசலிசத்தின் அடிப்படையாகும். இல்லாதோரைப் பேணுவது அவர்களை உயர்த்துவது என்பதே சோசலிச சார்புஆகும்.

இல்லாதோரைப் பேணுவதில் இந்த நிதிநிலை அறிக்கை எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளது என்பதே கேள்வி. வாழ்க்கைச் செலவு முதலியன பற்றிப் பலர் குறிப்பிட்டனர். இந்த நிதிநிலை அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ள சம்பள உயர்வு பற்றியே நான் குறிப்பிட விரும்புகிறேன். உயர்மட்ட அரசு ஊழியர்கள் இத்திட்டத்தால் இரட்டை நன்மை பெறுவர் என மன்னார் பா, உ. (திரு. சூசைதாசன்) குறிப்பிட்டார்.

இரண்டாயிரம் ரூபா சம்பளம் பெறும் ஓர் உயர் அதிகாரி இருநூறு ரூபா சம்பள உயர்வு பெறுவதோடு வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்குப் பெறுகிறார். அவருக்கு மாதந்தோறும் அறுநூறு முதல் எழு நூறு ரூபா வரை நயம் கிடைக்கிறது. அவரது துணைவர் உழைப்பவராயின் அவருக்கும் சம்பள உயர்வு கிடைப்பதோடு வருமான வரிவிலக்கும் கிடைக்கிறது. ஆகவே அந்த வகுப்பினர், பிரிவினர் அதிக நன்மை பெறுகின்றனர். அவர்கள் மீது அரசின் கவனம் செலுத்தப்படுகிறது. அவர்களுக்கு அதிக பணம்கிடைக்கிறது. இறக்குமதிக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருப்பதால் அவர்களுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களும் கிடைக்கின்றன. அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் மகிழ்ச்சியான வாழ்வு அமைகிறது.

ஆனால் ஏழையின் நிலை என்ன? குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள், வரி செலுத்தாத ஊழியர்களின் நிலைஎன்ன? அவர்களுக்குக் கிடைப்பது 50 ரூபா மட்டுமே, அதைவிட அவர்களுக்கு வேறு எதுவுமே இல்லை.

இந்த வேளையில் நான் அரசுக்கு ஓர் எச்சரிக்கை விட விரும்புகிறேன். அரசின் கொள்கை ஏழைகளை மேலும் ஏழைகளாக்கும். செல்வந்தர்களை மேலும் செல்வர்களாக்கும். இது மேலும் மேலும் அதிகமாகத் தொடர்ந்து நிகழும். இது புரட்சியின் எழுச்சிக்கு உரிய பொருத்தமான சூழலைத் தோற்றுவிக்கும். இந்தச் சபையிலே தமது கருத்துக்களை எடுத்துரைக்கும் வாய்ப்புச் சில சக்திகளுக்கு இல்லாமற் போய் விட்டதால் புரட்சிகர சக்திகள் பூண்டோடு அழிக்கப்பட்டு விட்டதாக எண்ணி விடாதீர்கள்.

நீங்கள் சரியான கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும். புரட்சிகளைத் தடுப்பதற்கு ஏற்ற வழி சோசலிச அடிப்படையிலான திட்டமிட்ட அபிவிருத்தியே என்பதை அரசு உணர்ந்து செயற்படவேண்டும்.

நாம் வெளிநாட்டு உதவிகளை எதிர்க்கவில்லை. சோசலிச நாடுகள் உட்பட எல்லா நாடுகளும் வெளிநாட்டு உதவியைப் பெறுகின்றன. என்ன நிபந்தனையில் உதவி பெறப்படுகிறது என்பதே முக்கியமானது வெளிநாட்டு உதவி சரியான முறையிற் பயன்படுத்தப்பட வேண்டும். குறுகிய கால, இடைக்கால நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களில் பணம் திட்டமிட்ட முறையிற் செலவு செய்யப்பட வேண்டும். இயலாவிட்டால் இதன் விளைவுகள் தீமை பயக்கும்.

(27-11-78 பாராளுமன்றத்தில் பேசியது)

---

## பைலட் பிரேம்நாத் பாடல் தணிக்கை செய்யப்படட்டும்!

இலங்கை-இந்திய கூட்டுத் தயாரிப்பான ‘பைலட் பிரேம்நாத்’ படத்தில் வரும் ‘‘நான்குபக்கமும் கடல் சூழ்ந்த சிங்களநாடு இலங்கை’’ என்ற பாடல் வரி தமிழ்மக்களைப் புண்படுத்துவதாக உள்ளதால், அந்தப்பாடல்வரியை படத்திலிருந்து நீக்கிவிடும்படி தணிக்கைக் குழுவிடமும், ராஜாங்க அமைச்சரிடமும் கோரிக்கைவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பாடல்வரிகள் நீக்கப்படாமல் படம் திரையிடப்பட்டால், விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா சபையில் தமிழ்ஈழத்துக்கு உறுப்புரிமை தரப்பட வேண்டும்

## சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துவிட்டது பிரிந்துவாழத் தமிழினம் தீர்மானித்துவிட்டது!

ஒரு தேசிய இனத்தின் வாழ்வில் சாதாரண கால அளவையினால் அளவிடப்பட முடியாத— ஆனால் அத்தேசிய இனம் ஏற்றுக் கொண்டிருக்கும் மகோன்னதமான இலட்சியத்தினாலும் நம்பிக்கையினாலுமே அளவிடக் கூடிய நாட்கள் வருவதுண்டு. தமிழ்த் தேசிய இனத்தின் காலத்துக்கெட்டாத வரலாற்றில், இன்று நாம் அத்தகைய நாட்களைக் கடந்துகொண்டிருக்கிறோம்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகாலமாக (நான் இலங்கை என்றே குறிப்பிடுகிறேன்— சிறீலங்கா என்று அல்ல) இலங்கை தமிழர், சிங்களவர், என்கிற இரண்டு தேசிய இனங்களை கொண்டதாக இருந்து வருகிறது. முதலாவது ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களான போர்த்துக்கீயரிடம் 1619ம் ஆண்டு தனது சுதந்திரத்தைப் பறிகொடுத்த தமிழ்த் தேசிய இனம், தொடர்ந்தும் இன்று வரை தமது சொந்த நாட்டிலேயே அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்ட இனமாகவே இருந்து வருகிறது. ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு முன் பல நூற்றாண்டுகளாக தமக்கெனத் தனியான சொந்த அரசை நிறுவி தனித்துவத்துடன் வாழ்ந்து வந்த தமிழர்கள் இப்போது நவீன காலனித்துவ ஆட்சியான சிங்கள ஆளும் வர்க்கத்தின் கீழ் இரண்டாந்தர குடிமக்களாகவும் அடிமைகளாகவும் நடத்தப்படுகின்றனர். தமிழர்கள் யுத்தத்தில் கைப்பற்றப்பட்டவர்கள் என்பதையும் அவர்கள் யுத்த முனையிலேயே தமது சுதந்திரத்தை இழந்தார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். சிங்கள அரசிலிருந்து வேறுபட்டு ஒரு தனியரசாக விளங்கி வந்த தமிழ் ஈழம் போர்த்துக்கீயரினால் கைப்பற்றப்பட்டது. ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் இருந்தபோது, இலங்கை ஒரு தீவே தவிர—அது ஒரே நாடுமல்ல; ஒரே அரசுமல்ல—

இரண்டு தேசிய இனங்களுக்கும் இலங்கைத் தீவு தாய் வீடு. இரண்டு தேசிய இனங்களும் சமவாய்ப்புள்ள பங்காளிகளாக வாழும் நிலை இருந்தாலன்றி— இலங்கையைப் பிரிக்க முடியாது என்று கூறுவது முட்டாள்தனமானது.

### பெரும்பான்மை ஆட்சித்தத்துவம் இலங்கைக்குப் பொருந்தாது.

இரண்டு தேசிய இனங்கள் வாழும்நிலப்பரப்பில்பெரும்பான்மை ஆட்சியென்ற ஜனநாயகத் தத்துவம் (MAJORITY RULE) முற்றுமுழுதாகச் செல்லுபடியாகாது என்று தெளிவாகத் தெரிந்திருந்தும் கூட— 1948 வரை இலங்கையை ஆட்சி செய்த பிரிட்டிஷ் எஜமானர்கள், தந்திரமாக பெரும்பான்மை இனமான சிங்களவர்களிடம் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்தார்கள். திருகோணமலை கடற்படைத்தளம், கட்டுநாயகா விமானத்தளம் போன்றவற்றை உபயோகிக்கும் தமது சுயநலத்துக்கான சில பொருத்தங்களை சிங்களப் பெரும்பான்மை இனத்துடன் பிரிட்டிஷார் செய்துகொண்டு அரசியல் அதிகாரத்தை அவர்களுக்கு மாற்றிக் கொடுத்தனர்.

சிங்களவர்கள் எண்ணிக்கையில் 110 இலட்சமாகவும், தமிழர்கள் 30 இலட்சமாகவும்இலங்கையில்இருந்தபோதிலும், ஒரு தனித் தேசிய இனமாக இருக்கின்ற தமிழர்கள் ஒரு போதும் 'சிறுபான்மை' மக்களாக இருந்ததில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு குழுக்களின் மேசைக்கு அடியில் நீண்டகாலமாக சிறுபான்மை மக்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இருந்து வருகிறது.

அடிப்படை சுதந்திரங்களையும் மனிதஉரிமைகளையும் பாதுகாப்பது, ஊக்குவிப்பது தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள சாசனத்தின் அடிப்படையில்— வரலாற்று ரீதியாகவும் வளர்ச்சியடைந்த நிலையிலும் [illegible] தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையாகும். இலங்கைத் தமிழர்கள் இந்த உரிமையைப் பிரயோகித்து இருக்கிறார்கள்.

எந்த ஒரு தேசிய இனத்திடமிருந்தும் பிரிக்க முடியாத உரிமையே சுயநிர்ணய உரிமையாகும். மக்களின் அடிப்படையான உரிமை சுயநிர்ணய உரிமையாகும். இந்த உரிமையின்றி வேறு எந்த உரிமைகளையும் அனுபவிக்க முடியாது. இது ஒரு தத்துவம் மட்டுமன்றி— மனித உரிமைகளிலே மிகவும் முக்கியமான உரிமையுமாகும். அரசியலில் சுயநிர்ணய உரிமை என்பதன் பொருள் —பிரிந்து சென்று சுதந்திரமான தேசிய அரசொன்றை அமைப்பதைக் குறிக்குமே தவிர வேறு எதையும் அல்ல.

ஒரு பெரிய சந்தையிலும், பெரிய நாட்டிலும் இருந்து பெறக்கூடிய நன்மைகள் பற்றியும், பூகோள, பொருளாதார உறவுகளின் பெறுமதி பற்றியும் நாளாந்த வாழ்க்கையின் மூலம் மக்கள் தெளிவாக அறிவார்கள். எனவே தேசிய ஒடுக்குமுறையும்,தேசியவெடிப்பும் ஏற்பட்டு கூட்டு வாழ்க்கை சகிக்க முடியாததாகவும், பொருளாதார வாழ்வைப் பின் தள்ளுகின்ற சூழ்நிலையிலும் மட்டும் தான் அவர்கள் பிரிவினைக்கு முயற்சிப்பார்கள். இந்தச் சூழ்நிலையிலே தான் தமிழ் மக்களும் பிரிவினை பற்றி முடிவு செய்துள்ளனர்.

### இந்த மோதல் இனவாரியானதா வர்க்க ரீதியானதா?

இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் முதலாளித்துவ அபிவிருத்தி நலன்களும், வர்க்கப் போராட்டத்தின் சுதந்திரமும் காப்பாற்றப் படுவதற்கு ஒரே வழி பிரிவினையேயாகும். இலங்கையில் உள்ள மோதல்— அடிப்படையில் இன ரீதியானதே தவிர— பெருமளவு வர்க்கப் போராட்டத்தின் குணப்பண்புகளைக் கொண்டது அல்ல. தமிழ் தேசிய இனத்தின் உயிர் வாழ்வே ஈடாட்டம் கண்டுள்ள நிலையில்— வர்க்கப் போராட்டமும், இனப் போராட்டமும் ஒன்றாக இணைந்து விட்டதென்று கூறலாம். தமிழ்த் தேசிய இனத்தை வாழவைப்பதற்கே நாம் முதலிடம்கொடுக்க வேண்டும்.



ஓர் புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கும், ஓர் பலம் வாய்ந்த உலகின் உச்ச சமஷ்டி அரசாங்கம் உருவாகுவதற்கும்— அடிப்படையாக சுயநிர்ணய உரிமை முற்று முழுதாக அங்கீகரிக்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமைக்கும், பொருளாதார அபிவிருத்திக்குமிடையே உள்ள நெருக்கமான தொடர்பு அழுத்தமாக வலியுறுத்தப்பட வேண்டும்.

புதிய சர்வ தேசிய பொருளாதார அமைதிக்கும், ஒவ்வொரு அரசும் தனது தேசிய வளங்கள் மீது தனக்குள்ள இறைமையை உறுதி செய்யவும்— பொருளாதார உரிமைகளும் அரசுகளின் கடமைகளும் சம்பந்தமான ஐ. நா. சாசனத்திலுள்ள விதிகளை முறையாக நடைமுறைப்படுத்தவும்— சம்பந்தப்பட்ட மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை ஏற்கெனவே பிரயோகித்து விட்ட நிலையில்— தமிழ் ஈழம் போன்ற புதிய நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ஐ. நா. சபை தலையிட்டு, அவற்றுக்கு அங்கீகாரம் வழங்கி அவைகளை புதிய உறுப்பினர்களாக அனுமதிக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

தமிழர்கள் இன்னும் தங்களைத் தாங்களே ஆளவில்லையென்ற காரணத்துக்காக அவர்களுக்கு ஐ. நா. சபையில் இடம் அளிக்கக் கூடாது என்கிற வாதம் ஏற்புடைய ஒரு வாதமாக மாட்டாது. சாசனத்துக்குத் தேவையான திருத்தம் கொண்டு வரப்படுவதன் மூலம்— புதிய முன்மாதிரிகளை உருவாக்க முடியும்.

ஐ. நா. சாசனத்தின் 52வது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைப்படி— பிராந்தியப் பிரச்சினைகள் பிராந்திய மட்டத்தில் சந்திக்கப்பட வேண்டியவையென்று ஐ. நா. செயலதிபர் கூறியிருக்கிறார். சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதில், ஆபிரிக்க ஒற்றுமை இயக்கம் போன்றபிராந்திய அமைப்புக்கள் ஐ. நா. சபையின் பங்குக்கு ஈடாக, அதன் இலட்சியங்களை ஆதரித்து செயற்பட்டு வருகின்றன.

—(அடுத்த இதழில் முடியும்)

**கிருஷ்ணா வைகுந்தவாசன்**
அழைப்பாளர்; லண்டன் தமிழர் இணைப்புக் குழு.

இலங்கையில் சிங்களவரும் தமிழரும் வாழ்வதுபோல— ஒரே நாட்டில் இரு இனங்கள் வாழுகின்ற போது— பெரும்பான்மை இனத்தின் கொடுங்கோன்மையே ஜனநாயகத்துக்கு ஆபத்து விளைவிக்கும் கொடுங்கோமை இதைவிட வேறுகிடையாது. தமிழ் பேசும் மக்களுக்கு சட்ட ரீதியாகவோ, யதார்த்த ரீதியாகவோ சமசந்தர்ப்பம் கிடையாது.

## அமிர் கூறுகிறார்...!

''TAMIL EELAM NATION AND U. N. O'' (தமிழ் ஈழமும் ஐ. நா. சபையும்) என்ற தலைப்பில் ஆங்கிலப் பிரசுரம் ஒன்றை திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் லண்டனில் வெளியிட்டுள்ளார். அதிலுள்ள முதலாவது பகுதியின் தமிழாக்கம் இங்கு இடம் பெற்றுள்ளது; இரண்டாவது பகுதி அடுத்த வாரம் இடம்பெறும்—

இப் பிரசுரத்துக்கு முன்னுரை வழங்கியுள்ள தமிழீழ முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் அதிலே பின்வருமாறு குறிப்பிடுகிறார்—

அரசாங்க ஊழியர்கள் மத்தியில் தொழிற்சங்கத் துறையை ஏற்படுத்துவதில் முன்னோடியாக விளங்கியவர் திரு. கிருஷ்ணா வைகுந்தவாசன் என்பது இலங்கையில் நன்கு தெரிந்த விடயம். 1948ம் ஆண்டு சுதந்திரத்துக்கு பிற்பட்ட சில ஆண்டுகளில் மார்க்ஸீயக் கட்சிகள் ஈட்டிய பல வெற்றிகளில் அரசாங்க லிகிதர் சேவைச்சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த அவர், முக்கிய பங்காளராக விளங்கினார்.

இத்தகைய பின்னணியிலுள்ள ஒருவரிடமிருந்து இவ் வெளியீடு வருகிறதென்றால்— சிங்களவர்களுடன் இன்னியும் ஒற்றுமையாக வாழ முடியும் என்று இன்னும் கனவு கண்டுகொண்டிருக்கும் எவரது கண்களையும் திறப்பதற்காக இது பயன்பட வேண்டும்.

உலக நாடுகளிடையே தமிழர்களின் இலட்சியத்துக்காக செய்யப்பட வேண்டிய பிரசாரமே இன்றைய நிலையில் அவசரத் தேவையாகும். சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சருக்கு முன், ஐ. நா. பொதுச்சபையின் மேடையைப் பயன்படுத்திய போது, திரு. வைகுந்தவாசன் உலக வரைபடத்தில் தமிழ் ஈழத்தை இடம்பெற வைத்தார். அவரது இந்தப் பெருஞ்செயலுக்கும் தொடர்ந்து இப் பிரசுரத்தின் மூலம் தமிழர் கோரிக்கையை பிரசாரம் செய்வதில் அவர் தனது பங்கைச் செலுத்துவதற்கும் தமிழ்த் தேசிய இனம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது. தனது சுதந்திரத்தை ஈட்டிக்கொள்வதற்காக அவரது ஆற்றல், துணிச்சல், சலிக்காத முயற்சி ஆகியவற்றைப் பயன்படுத்துவது தமிழ் இனத்தைப் பொறுத்ததாகும்''

சரி, இனிக்கட்டுரையைப் படியுங்கள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.



# சனவரியில் தமிழ்ப் பாடசாலைகளில்

# சிங்கள மொழித் திணிப்பு!

## கூட்டணியின் கட்டளையை தமிழ் மாணவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிருர்கள்!

1956ல் நிறைவேற்றப்பட்டசிங்களம் மட்டும் சட்டத்தின் பின், கடந்த22ஆண்டுகளாக சிங்களப் படிப்புக்கு மூடுவிழா நடத்தியுள்ள தமிழ்ப்பாடசாலைகளில்—அதே சிங்களம் மட்டும் சட்டம் மேலும் வலுவுடன் அரசியலமைப்பிலே இடம்பெற்று விட்டுள்ள இன்றைய நிலையில்—இணைப்புமொழி என்ற பெயருடன் சிங்களம் கட்டாயமொழியாக 1979 சனவரியில் தமிழ்ப் பாடசாலைகளில் நுழைகிறது.

ஆதிக்க மொழியானசிங்களம் தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் கட்டாய மொழியாகப் புகுத்தப்படுவதை எதிர்த்து தமிழ் மாணவமாணவியர் தாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழின விடுதலைப் பேரியக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

1979 சனவரியிலிருந்து சிங்களம் இணைப்புமொழி என்ற பெயரில் தமிழ்மாணவர்களுக்கான ஒரு கட்டாய மொழியாகப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறது. பரீட்சைகளும் அது ஒரு கட்டாய பாடமாக்கப்பட விருக்கிறது.

இந்த நிலையில் கடந்த 22 ஆண்டுகளாக விடாப்பிடியாக சிங்களத் திணிப்பை எதிர்த்து வந்த தமிழ்க்குலம் இணைப்பு மொழியென்ற பெயரில் தமிழினத்தை விழுங்க விருக்கும் ஆதிக்க மொழியான சிங்களத்தை அடிமைத்தனமாக ஏற்றுக் கொள்ளப்போகிறதா அல்லது அதை எதிர்த்துப் புதிய புறநானூறு படைக்கப்போகிறதா என்பதை அனைவரும் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

மூதறிஞர் தந்தை செல்வா தாம் உயிருடன் இருக்கும் வரை வேறு எதிலும் விட்டுக் கொடுத்தாலும். சிங்களம் படிப்பதில்லையென்ற இலட்சியத்திலிருந்து அணுவளவும் விட்டுக் கொடுக்க மறுத்தார். சிங்களத்துக்கு இடம் கொடுத்தால் தமிழும் தமிழினமும் அழிந்து விடும் என்று எச்சரித்தார். சிங்களத்தை திணிக்க அரசு முயற்சியெடுத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை எதிர்த்து முறியடித்தார்.

இன்று தந்தை செல்வாவின் பாதையிற் செல்லும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏகாதிபத்திய மொழியாகிய சிங்களம் தமிழ்ப் பாடசாலைகளில் இணைப்பு மொழியென்ற பெயரில் திணிக்கப்படுவதைக் கண்டு கொண்டு மௌனமாக இருக்கப் போகிறதா அல்லது அதை எதிர்த்து களம் அமைத்துப் போராடப் போகிறதா என்பதை அனைவரும் கூர்ந்து நோக்கி வருகின்றனர்.





திருப்திகரமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்

மில்க்வைற் நீல சோப் புதுப் பொலிவுடன் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தியை அல்லது பிரசுரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற்-யாழ்ப்பாணம்

## கெப்பிட்டல்

சிவாஜிகணேசன் - மாலினிபொன்சேகா
விஜயகுமார், ஜெயசித்திரா
மற்றும்பலர் நடித்த—

**பைலட் பிரேம்நாத்**

ஈஸ்மன் கலர்)

## லிடோ (யாழ்நகர்)

**தெய்வ மகன்**

## கிங்ஸ்லி

(கொழும்பு)

சிவாஜி கணேசன், மாலினிபொன்சேகா
விஜயகுமார், ஜெயசித்திரா நடித்த-

**பைலட் பிரேம்நாத்**

[ ஈஸ்மன் கலர் ]

## கெயிட்டி

2-வது வாரம்
[கொட்டாஞ்சேனை]

சிவாஜி கணேசன், தேவிகா,
சுந்தரராஜன், நாகேஸ், மனோரமா
- நடித்த -

**அன்புக் கரங்கள்**

## செல்லமகால்

3-வது வாரம்

ஜெமினிகணேசன், சுஜாதா,
கமலஹாசன்- சுமித்ரா,
புரெபசர் விஸ்வநாதன், பண்டரிபாய்,
ஏ. கே. தங்கவேல், சுகுமாரி,
தேங்காய் சீனிவாசன், புஷ்பா நடித்த-

**லலிதா**

( ஈஸ்மன் கலர் )


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org